உ

சிவ சிவ

# சிவநெறிச் சிந்தனை



இயற்றியவர்: சைவதுரந்தரர், கவிநாயகர்
வி. கந்தவனம்

வெளயீடு: கனடா சைவசித்தாந்த மன்றம்

உ

சிவ சிவ

# சிவநெறிச் சிந்தனை


**சைவதுரந்தரர், கவிநாயகர்**

**வி. கந்தவனம்**



**வெளியீடு:**

**கனடா சைவசித்தாந்த மன்றம்**

# நூல் விபரம்

**நூல்:** **சிவநெறிச் சிந்தனை**

**முதற் பதிப்பு:** நந்தன வருடம் பங்குனித் திங்கள்
மார்ச் 29, 2013
திருவள்ளுவர் ஆண்டு: 2044

**ஆசிரியர்:** **சைவதுரந்தரர், கவிநாயகர்**
**வி. கந்தவனம்**

**வடிவமைப்பு:** பாரதி பதிப்பகம்

**வெளியீடு:** சைவ சித்தாந்த மன்றம், கனடா
1008 - 50 Elm Drive East
Mississauga, Ontario
L5A 3X2 Canada
905 - 566-4822

**அன்பளிப்பு:** $ 2/=

# பதிப்புரை

சைவதுரந்தரர், கவிநாயகர் வி. கந்தவனம் அவர்கள் வெண்பா அமைப்பில் **"சிவநெறிச்சிந்தனை"** என்னும் சிற்றலக்கிய நூலை இயற்றியுள்ளார். அவர் 2012 ஆம் ஆண்டில் இயற்றிய 24 சிற்றிலக்கிய நூல்களில் இதுவும் ஒன்றாகும். இந்நூலையும் கனடா சைவசித்தாந்த மன்றம் பதிப்பித்து வெளியிடும் உரிமையையும் உவந்தளித்துள்ளார். சைவதுரந்தரர், கவிநாயகர் அவர்களுக்கு இந்த அரிய பணியை மன்றத்திற்கு அளித்தமைக்கு மன்றம் நன்றி கூறுவதோடு, இது போன்ற அவரின் அரும் பணிகள் மேன்மேலும் சிறந்து விளங்க சிவபெருமான் திருவருள் பாலித்தருள வேண்டி வணங்குகிறோம்.

கவிநாயகர் கந்தவனம் அவர்கள் **"பாவாரம்"** என்ற தலைப்பில் பாரதத் திருத்தலங்கள் 63 இன் மேலும் ஈழத்துத் திருத்தலங்கள் 45 இன் மேலும் 1170 பாடல்கள் பாடியுள்ளார். இத் திருப்பாடல்கள் யாவும் மூவர் முதலிகள் பாடிய தேவாரங்கள் போன்ற உணர்வைத் தருகின்றன. கவிநாயகர் சிவசிந்தனையோடு வாழ்ந்து வருபவர்; திருமுறைகளில் உணர்வு பூர்வமாகத் தோய்ந்தவர்; சிவநெறியையும் சைவத்தின் மேன்மையையும் பரப்பி வருபவர். அவர் **சிவநெறிச் சிந்தனை** என்ற சிற்றிலக்கிய நூலை இயற்றி மேலும் சிவநெறிக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

கவிநாயகர் மன்றம் தொடங்கிய காலத்திலிருந்து மன்றப் பணிகளுக்கு உறுதுணையாக நின்று ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருபவர். அவர் மன்றத்தின் காப்பாளர்களில் ஒருவராகவும், அன்புநெறி சிறப்பாசிரியர்களில் ஒருவராகவும் இருந்து வருகிறார்.

சித்தாந்தக் கலாநிதி பேராசிரியர் முனைவர் திருமதி கோமதி சூரியமூர்த்தி அவர்களை **சிவநெறிச்சிந்தனை** என்ற நூலுக்கு அணிந்துரை எழுதித்தருமாறு வேண்டிய பொழுது மனம் உவந்து உரிய காலத்தில் எழுதி உதவினார்கள். அவருக்கு மன்றத்தின் சார்பில் உள்ளம் நிறைந்த நன்றியைக் கூறுகின்றேன்.

முனைவர் கோமதி சூரியமூர்த்தி அவர்கள் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் சைவசித்தாந்தத் துறைத் துணைப் பேராசிரியராகப் பல ஆண்டுகள் பணியாற்றி ஓய்வு பெற்றவர். இவர் பல நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்; பல சமய சஞ்சிகைகளுக்கு கட்டுரைகள் எழுதி வருபவர்.

சேக்கிழார் விருது, சித்தாந்த கலாநிதிப் பட்டம், திருநாவுக்கரசர் விருது, சைவநன்மணிப் பட்டம், சித்தாந்த சாகரம் என்ற பட்டம், சித்தாந்த சேயிழை என்ற பட்டம் போன்ற பட்டங்களும் விருதுகளும் இவருக்குப் பல நிறுவனங்கள் வழங்கி கௌரவித்துள்ளன.

முனைவர் அவர்கள் சாத்திர நூல்களிலும் திருமுறை களிலும் சிறந்த பயிற்சி பெற்றவர்; சிறந்த சித்தாந்த சைவசமயச் சொற்பொழிவாளர். இவர் அன்புநெறி திங்கள் இதழின் சிறப்பு ஆசிரியர்களில் ஒருவர்.

நூலின் அட்டையையும், நூலையும் அழகுற வடிவமைப்புச் செய்த அன்புநெறி ஆசிரியர் திருமதி வடிவழகாம்பாள் விசுவலிங்கம் அவர்களுக்கு மன்றத்தின் சார்பில் நன்றியைக் கூறுகின்றேன்.

இந்நூலை அன்பர்கள் பெற்றுப் படித்து சிவநெறிச் சிந்தனை வளர ஆக்கம் புரிய சிவபெருமான் திருவருள் துணை நிற்க வேண்டுகிறேன்.

29-03-2012

திரு. தி. விசுவலிங்கம்
தலைவர்
சைவ சித்தாந்த மன்றம், கனடா

# அணிந்துரை

(சித்தாந்த கலாநிதி, சைவநன்மணி, சித்தாந்த சாகரம்,
முனைவர் திருமதி கோமதி சூரியமூர்த்தி,
அன்புநெறி சிறப்பாசிரியர், மதுரை)

கலாநிதி கவிஞர் வி. கந்தவனம் இயற்றிய **சிவநெறிச் சிந்தனை** என்ற கவிதை நூலுக்கு அணிந்துரை எழுத வாய்ப்புக் கிடைத்ததை அடியேன் பெற்ற பேறாகக் கருதுகிறேன். கவிஞர் வி. கந்தவனம் அவர்கள் கனடா சைவசித்தாந்த மன்றம் வெளியிடும் அன்புநெறி திங்கள் இதழின் சிறப்பாசிரியரும், மன்றத்தின் காப்பளர்களுள் ஒருவரும் ஆவார். அவர் திருவாசகம் பற்றிப் பதினைந்து தலைப்புக்களில், ஒவ்வொன்றுக்கும் பத்துக் குறள்கள் வீதம் 150 குறள்கள் அவரே இயற்றி, அவற்றின் தெளிவுரைகளையும் அவரே எழுதி அன்புநெறியில் தொடராக வந்தது. “வாழும் வாசகம்” என்ற தலைப்பில் நூலாக வெளி வந்துள்ளது, அதனை வாசித்த போது அடியேன் பெற்ற இன்பத்தை வார்த்தைகளால் வர்ணிக்க இயலாது. “அற்புதமான அமுதத் தாரைகள் எற்புத்துளைதோறும் ஏற்றினன்” என்ற திருவாசக அடியே நினைவிற்கு வருகின்றது. சைவர்கள் ஒவ்வொருவரும் கட்டாயம் அந்நூலை வாசித்தல் வேண்டும்.

தற்போது கவிஞர் வெண்பா யாப்பில் இயற்றிய 3+40 செய்யுட்கள் கொண்ட “சிவநெறிச் சிந்தனை” என்பது நூலாக வெளிவரத் திருவருள் கூட்டி வைத்துள்ளது. இந்நூலுக்கு முதற்கண் அவர் கடவுள் வணக்கமும், அவையடக்கமும் பாடி, நூலின் இறுதியில் நூற்பயனும் கூறியுள்ளார்.

இடைக்காலத்தில் இருந்தே நூலியற்றுவோர் நூல் இடையூறின்றி முடியும் பொருட்டு விநாயகப் பெருமான்மீது காப்புச் செய்யுள் பாடுவது மரபாயிருந்து வருகின்றது. இந்நூலாசிரியரும் அம்மரபைத் தழுவி முதற்கண் விநாயகப் பெருமான் மீது கடவுள் வணக்கம் பாடியுள்ளார்.

பின் அவையடக்கத்தில் தாம் சிவநெறிச் சிந்தனைகளைத் தேர்ந்து நூலாக இயற்றியமைக்கு இரு காரணங்கள் கூறுகின்றார்.

1. சைவதிருவாழ்வில் பொய்யும், களவும் புகுந்துள்ளமை
2. உலகோர் உய்ய மனம் வைத்தது.

திருஞானசம்பந்தர் திருப்பாசுரத்தில்,

"ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே"

என்று பாடியுள்ளது நம் நினைவிற்கு வருகிறதல்லவா? வையகம் உய்ய சித்தாந்தக் கருத்துக்களைத் திருப்பாசுரத்தில் ஞானசம்பந்தர் பாடியது போன்று கவிஞர் வையத்தோர் உய்ய சிவநெறிச் சிந்தனை பாடியருளியுள்ளார்.

இக்கவிதை நூல் சைவத்தின் சிறப்பை உணர்த்துகின்றது. சைவசித்தாந்தக் கருத்துக்கள், அறக்கருத்துக்கள், திருமுறைச் சிந்தனைகள் முதலியன இந்நூலில் அதிகம் உள. ஒரு சிலவற்றை எடுத்துரைக்க விரும்புகின்றேன்.

**சைவத்தின் சிறப்புரைத்தல்**

சேக்கிழார் வேதத்தை நெறியாகவும், சைவத்தைச் சென்றடைதற்குரிய துறையாகவும் போற்றுகிறார். "வேதப் பயனாம் சைவம்" எனப் புகழ்கின்றார். "சைவத்தின் மேற்சமயம் வேறு இல்லை" என்கின்றார் சைவ எல்லப்ப நாவலர். "சைவசமயமே சமயம்" எனப் போற்றுகிறார் தாயுமானவர்.

கவிஞர் கந்தவனம் அவர்களும் "சமயங்கள் யாவுக்கும் தாய்ச்சமயம் சைவம்" எனப் போற்றுகின்றார். பிற சமயங்கள் எல்லாம் அதற்குப்பின் தோன்றியனவே. சமயங்கள் பல தோற்றுவிக்கப்பட்ட காலம் தெரிய வருகின்றது. ஆனால் சைவசமயம் தோற்றுவிக்கப்பட்ட காலம் தெரியவராத தொன்மை வாய்ந்தது.

மேலும் பிற சமயங்களுள் பல அவ்வச் சமயங்களின் அருளாளர்களால் தோற்றுவிக்கப்பட்டன. ஆனால் சைவசமயமோ அதன் தெய்வமான சிவபெருமானாலேயே தோற்றுவிக்கப்பட்ட சிறப்புடையது என்பதைக் கவிஞர் உணர்த்துகின்றார். (செ., 13)

சைவத்தில் போலி இல்லை, சாதிபேதங்கள் இல்லை எனக் கவிஞர் போற்றுகின்றார் ( செ. 7)

"சாத்திரங்கள் பல பேசும் சழக்கர்காள்
கோத்திரமும் குலமும் கொண்டு என் செய்வீர்"
......"ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்பராகில்
அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே"

என்ற திருநாவுக்கரசரின் திருவாக்குகளும், பெரியபுராண நாயன்மார்களின் வரலாற்று நிகழ்வுகளும் சாதிபேதம் பாராட்டாதது சைவசமயம் என்பதை உணர்த்தும்.

### சித்தாந்தக் கருத்துக்களை உணர்த்துதல்

கவிஞர் இந்நூலில் உணர்த்தும் சித்தாந்தக் கருத்துக்கள் பலவாயினும், ஒரு சில கூறுதல் தகும். சைவசித்தாந்தம் பதி, பசு, பாசம் என்ற முப்பொருள்கள் பற்றி விளக்குவன. பதி–சிவன். அவன் ஒருவனே. பசு–உயிர்கள். அவை எண்ணில. பாசம்–ஆணவம், கன்மம், மாயை. முப்பொருள்களும் என்றும் உள்ள பொருட்கள். அவை அநாதி. கவிஞரும்

"சிவனொன்றே சீவன் திகழ்கோடி பாசம்
அவைமூன்றும் உண்மை அனாதி – அவற்றின்
விளக்கமே சைவநற் சித்தாந்தம் மேன்மை
அளக்கொணா ஆழம் அறி." (செ.14)

என்கிறார்.

திருமந்திரத்தில் முதல் தந்திரத்தில் முதற்பகுதி சிவபரத்துவம் உரைப்பது. (சிவனின் முழுமுதற் தன்மையை உணர்த்துவது). கவிஞரும் "சிவனே முதற் கடவுள்" (செ.2) "சிவனே ஒரு தெய்வம்" (ஒரு - ஒப்பற்ற) "அவனே அனைத்துலக ஆதி" (செ.5) எனப் போற்றுகின்றார். மகாசங்கார காரணனான சிவனே உலக தோற்றத்திற்கு நிமித்த காரணன். "அந்தம் ஆதி" என்று மெய்கண்டார் கூறுவது இங்கு நினைவு கூரத்தக்கது.

"செல்வன் கழல் ஏத்தும் செல்வம் செல்வமே" என்று ஞானசம்பந்தர் கூறுகிறபடி, அனைத்துயிர்கட்கும், மேலான அரும் செல்வத்தை வழங்கும் சிவனைச் "செல்வத்துட் செல்வம்" (செ.5) எனக் கவிஞர் போற்றுகின்றார்.

சிவனும் சீவனும் ஒன்று என்று சொல்லும் வண்ணம் இருமையுள் ஒருமைப் பிரிப்பின்றி நிற்கும் நிலையே அத்துவிதம். கவிஞரும்

"சிவனின்றிச் சீவனில்லைச் சீவனுக்குச் சீவன்
அவனின்றி யாதுமசை யாதாம்" (செ. 3)

என்கின்றார். உயிர்க்குள் உயிராய் இருந்து இறைவன் அவற்றை இயக்குவதால் வேதம் விசுவாந்தர்யாமி எனப் புகழும். (விசுவம் - உலகம், அந்தம் - உள்ளே, யாமி - இயக்குபவன்.) கூலியாளாய் வந்த இறைவன்மீது பட்ட அடி உலகுயிர்கள் அனைத்தின் மீதும் பட்டமை, இவ்வுண்மையை உணர்த்தும்.

சைவசித்தாந்தம் கூறும் தத்துவம் 36. இறைவன் அவற்றுக்கு அப்பாற்பட்ட தத்துவாதீதன். இம்முப்பத்தாறு தத்துவங்களையும் ஞானத்தின் படிநிலைகள் பத்தில் ஏறிச் சென்றால் (தசகாரியம்) முத்தியை இப்பிறவியிலேயே உயிர்கள் இறையருளால் எய்தலாம். இவ்வாறு உடம்பில் உயிர் இருக்கும்போதே சிவப்பேரின்பத்தை அனுபவித்தல் சீவன்முக்தி எனச் சித்தாந்தம் கூறும். இச்சித்தாந்தக் கருத்துக்களை உள்ளடக்கி

"தத்துவம்முப் பத்தாறும் தாண்டின் இறைவனுடன்
அத்துவிதம் ஆகி அரிதாய - முத்தியினை
இப்பிறப்பிற் றானே இறையருளால் எய்திநின்ற
செப்பரிய சித்தர்திறம் தேர்." (செ. 21)

என்கின்றார் கவிஞர்.

"மானுடப் பிறவிதானும் வகுத்தது மனம், வாக்கு, காயம்
ஆனிடத்து ஐந்தும் ஆடுக அரன் பணிக்காக அன்றோ"

என்கின்றார் அருணந்திசிவாசாரியார். உயிர்கள் வினைப்பலன்களை அனுபவிக்க இறைவன் அவற்றுக்குத் தூல உடம்பு கொடுத்துப் பிறக்கும்படி செய்கின்றான். அவ்வுடம்பின் திரிகரணங்களால் அவனை வழிபட திரிகரணங்களால் செய்த வினைகள் அவனருளால் நீங்கும். இதனைக் கவிஞர்.

"பெற்ற பிறப்பின் பெரும்பயனை நன்குணர்வார்
பற்றிச் சிவனைப் பரவிநிதம் - உற்ற
வினைகள் அறுத்தவரின் மேலான இன்ப
மனையை அடைவார் மகிழ்ந்து." (செ.11)

என்கின்றார்.

பதிஞானமே வீடுபேற்றைத் தரும். கவிஞரும்

"அதியார்வத் தாலே அறிவொளியை ஏற்றின்
பதிஞானம் முற்றிப் பழுக்கும் - அதனாலே
. . . . . . . .ஆனந்த வீடதனை
எய்தும் . . ." (செ.40)

என்கின்றார்.

**அறக்கருத்துக்களை உணர்த்தல்**

மக்கள் இறைவனை அழுந்தி அனுபவிக்கும்படி அவர்களை பக்குவப்படுத்தும் அறநெறிகளையும், ஒழுக்கத்தையும்

உணர்த்தும் சமயமே உண்மைச் சமயமாகும்.

"கொலை களவு கள் காமம் பொய்கூறல்
மலையான பாதகமாம் அவை நீக்கு"

என்று திருமூலர் அறிவுறுத்துகின்றார். இவற்றை அறவே நீக்காத வழி மனிதனுக்கு நற்கதி உண்டாகாது. கவிஞரும்,

"களவுள்ளல் வஞ்சம் கரவுபொய் தஞ்சம்
கொளுமுள்ளம் செய்யும் கொலையும் – அளவில்லா
அன்பை வளர்க்கும் அடியார்க் கவையாகா
புன்கண் களைவீர் புரிந்து." (செ. 25)

என அறிவுறுத்துகின்றார்.

மனமே பந்தத்திற்கும் முத்திக்கும் காரணம் ஆகின்றது. ஐம்புலன்களின் செயற்பாட்டிற்கும் பின்புலமாக இருப்பது மனமே. எனவே மன அடக்கம் இன்றியமையாதது. புத்தியுள்ள மனிதர்கள் மனம் போன போக்கில் வாழார். குதிரைகட்குக் கடிவாளம் போடுவது போல அவர்கள் மனத்திற்கு ஒரு பூட்டும் போடுவர். புலன்களை உலகவழி நோக்கில் செல்லவிடாது இறைவழி நோக்கில் திருப்பி மனத்தை அடக்கி ஆள்வார்க்கே சிவம் வெளிப்படும். ஐம்புலச் சேட்டைகட்கு ஆட்படுவோர்க்கு இறையருள் கிட்டாது. அவர்கள் பிறவிச் சூழலில் அகப்பட்டுத் துன்புறுவர். (செ. 16, 17, 18)

விரதங்களால் உடலை வாட்டுவதைவிட திருவைந் தெழுத்தை மிக அன்புடன் செப்புவதே சிறந்த விரதம் என்று கவிஞர் அறிவுறுத்துகின்றார். (செ. 37).

திருநீற்றைப் பூசி இறைவனைப் போற்றி வழிபடுபவரின் இருள்மலம் தேயும். ஐந்தெழுத்து மந்திரத்தைப் பக்தியுடன் ஓத ஒப்பில்லா மகிழ்ச்சி உண்டாகும். (செ. 39, 38)

சிவபூசை செய்ய வேண்டும். அவ்வாறு பூசை செய்ய வீடுகளில் தனி அறை வேண்டும் (செ. 34). ஏனென்றால் அப்பொழுது தான் மனம் இறைவன்பால் ஒருமுகப்படும்.

அன்பே சிவம் என்பது திருமூலர் வாக்கு. கவிஞர் அதை உணர்த்துவதோடு தமிழ்மொழியின் தன்மையும் அன்பு என்கின்றார். எனவே தமிழும் சிவமும் சமம் (செ.1) என்று கூறுவது, வாசிப்போர் அன்பு என்னும் பண்பை வளர்ப்பதுடன், தெய்வபக்தியையும் தாய்மொழிப்பற்றையும் வளர்க்க வேண்டும் என்பதை அறிவுறுத்துகின்றது.

## திருமுறைகளைப் போற்றுதல்

சுந்தரரை இறைவன் தடுத்தாண்டபின் திருவெண்ணெய் நல்லூர்க் கோயிலில், "நமக்கு அன்பின் பெருகிய சிறப்பின் மிக்க அர்ச்சனைப் பாட்டே ஆகும். ஆதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுக" எனப் பணித்தார். எனவே இறைவன் பூமாலை களைச் சூடுவதை விட பாமாலை சூடவே விருப்பம் உடையவன் என்பது புலனாகும். கவிஞர் இதனை,

"பூவாரம் சூட்டலிலும் பூசைபல செய்தலிலும்
பாவாரம் சூட்டல் பயனாகும் – ஓவாதே
நாவார நாயன்மார் நாளும் பரவிநின்ற
தேவாரம் கேட்பார் சிவன்" (செ. 9)

என்கின்றார்.

மேலும் மற்றொரு பாடலில்

"................... தேவாரம்
ஓதல் மிகநன்றாம் ஓதச் சிவன்மீது
காதல் கனிந்திடுமாம் காண்." (செ.10)

என்றும் திருவாசகம் ஓத திருவருளானந்தம் பெறலாம் (செ.12) என்றும் கூறுகின்றார்.

**முன்னோர் மொழிகளைப் போற்றுதல்**

"ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி"

என்ற வள்ளுவர் வாக்கை அடியொற்றியதாக

ஒழுக்கம் உயர்வுதரும் என்றார் உணர்ந்தோர்
இழுக்காம் அதில்நின்று இழிதல் (செ. 26)

என்ற வெண்பா அடிகள் அமைந்துள்ளன.

மேலும் கவிஞர் "அன்பே சிவம்" செ. 1, "ஒன்றே குலம்", "ஒருவனே தேவன்" (செ. 6) என்ற திருமூலர் வாக்குகளையும் தம் கவிதையில் பொன்னே போல் போற்றியுள்ளார்.

திருமூலர், வருந்தியாயினும் நூல் நுனியைப் பற்றி ஏறுவோர் மதிலின் உச்சியை அடைந்து கோட்டையைப் பிடிப்பர். அது செய்ய மாட்டாது பக்கத்திலுள்ள சில வழிகளைப் பற்றி ஏறின் இடையே நின்று பயன் பெறார். அதுபோல நுண்ணிதாயினும் மெய்ந்நூல்களைக் கற்று ஒழுகுவோர் ஆன்ம லாபம் பெறுவர். அயலாகிய மயக்க நூல்களுள் ஒழுகுவோர் ஆன்ம லாபத்தைப் பெறார் என்பதை

"நூலொன்று பற்றி நுனியேற மாட்டாதார்
பாலொன்று பற்றினால் பண்பின் பயன்கெடும்".

என்று திருமந்திரத்தில் கூறுகின்றார். கவிஞர் திருமூலரின் இம்மொழிகளைப் போற்றி,

"நூலொன்று பற்றி நுனியுச்சி காணுநுட்பச்
சீலம் உரைத்த திருமூலர் – நூலதனைக்
கற்பார் பரமனருள் காட்டக் கதியடைந்து
துய்ப்பார் பிறவாச் சுகம்." (செ.8) என்கிறார்.

இளமையும் யாக்கையும் நிலையற்றவை. எனவே அவை உள்ள போதே நிலைத்த பொருளான சிவபெருமானின் திருவடிச் சிறப்பை உணர்த்தும் மெய்ந்நூற் கல்வியைக் கற்க வேண்டும். அதனால் பாவங்கள் நீங்கும் எனத் திருமூலர்

"நிற்கின்ற போதே நிலையுடையான் கழல்
கற்கின்ற செய்யின் கழிந்துறும் பாவங்கள்"

என்பதை அடியொற்றி கவிஞர்,

நிலையற்ற தெல்லாம் நிலையான கல்விக்
கலைகற்று வாழ்க்கைக் கடலை - அலைவின்றி
தாண்டத் தவஞ்செய்து தக்கோர் பெறுவாராம்
மீண்டும் பிறவாத வீடு. (செ.30)

என்ற மெய்ந்நூற் கல்வியை கற்க வேண்டும். அதனால் பிறவா நெறியாகிய பேரின்பம் பெறலாம் என உணர்த்துகின்றார்.

"சும்மா இரு சொல்லற என்றதுமே
அம்மா பொருளொன்றும் அறிந்திலனே"

என்று அருணகிரிநாதர் கந்தரனுபூதியில் சொல்வதை அடியொற்றி கவிஞர்,

அம்மான்(சிவன்) அருட்கடலில் ஆடி அடங்குதலே
சும்மா இருக்கும் சுகம். (செ.20)

என்கிறார்.

இறுதியாக நூற்பயனில் கவிஞர் மெய்ந்நூற் கல்வி கற்றுச் சிவநெறியில் ஒழுகி சிவசிந்தனையில் நிற்போர் இருவினையொப்பு வாய்க்கப்பெற பரம்பொருளே சற்குருவாய் எழுந்தருளி அற்புதங்கள் செய்து ஆள்வான் என்கிறார். இங்கு திருமூலர் கூறும்,

"இருவினை நேரொப்பில் இன்னருள் சக்தி
குருவென வந்து குணம்பல நீக்கித்
தரும் என ஞானத்தால் தன் செயலாற்றால்
திரிமலம் தீர்ந்து சிவன் அவன் ஆமே."

என்ற திருமந்திரப் பாடல் ஒப்பு நோக்கத்தக்கது,

சுருங்கக் கூறின் வெண்பா யாப்பால் கவிஞர் கந்தவனம் இயற்றிய சிவநெறிச் சிந்தனை என்ற இந்நூல் சைவத்தின் மேன்மையை உணர்த்தி கவிஞர்க்குச் சித்தாந்த நூல்களிலும் திருமுறைகளிலும் உள்ள நிரம்பிய புலமையையும், பக்தியையும் உலகோர் அறநெறியில் ஒழுகி உய்ய வேண்டும் என விரும்பும் அவரது கருணையையும் காட்டுகின்றது.

கவிஞர் இதுபோல் அருள்நூல்கள் பல இயற்றிட அங்கயற் கண்ணி உடனாய ஆலவாய்ச் சொக்கலிங்கப் பெருமானை இறைஞ்சி வாழ்த்துகின்றேன்.

"வைய நீடுக மாமழை மன்னுக
மெய் விரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறி தாம் தழைத் தோங்குக
தெய்வ வெண்திரு நீறு சிறக்கவே!"

திருச்சிற்றம்பலம



உ

# சிவநெறிச் சிந்தனை

## கடவுள் வணக்கம்

உற்ற கனிபெறவே பெற்றார் உலகென்று
சுற்றி வலம்வந்த தூமணியே – பற்றியுன்தாள்
பாடும் சிவநெறியைப் பார்த்துப் பிழைதிருத்தி
ஆடுமரன் ஏற்க வருள்.

## அவையடக்கம்

சைவத் திருவாழ்வு சாலச் சரிவுற்றுப்
பொய்யும் களவும் புகுந்தமையால் – வையத்தார்
உய்ய மனம்வைத்தே ஒண்பாக்கள் நாற்பதினாற்
செய்தேன் சிவநெறியைத் தேர்ந்து.

## நூல்

அன்பே சிவமாகும் அன்பே அறமாகும்
அன்பே உயிர்கள் அறிவாகும் – இன்பத்
தமிழ்மொழியும் அன்பாகும் தன்மையினால் யாண்டும்
தமிழும் சிவமும் சமம். (1)

சிவனே முதற்கடவுள் தேடித் திரிந்து
குவியும் பணிந்தவனின் கோயில் – சிவபெருமான்
மூலத்தா னத்தில் முதன்மூர்த்தி யாகவுள்ள
சீலச் சிவன்கோயில் சேர். (2)

சிவனின்றிச் சீவனில்லைச் சீவனுக்குச் சீவன்
அவனின்றி யாதுமசை யாதாம் – அவமே
சிறுதெய்வம் தேடி அலைதல் சிவனை
அறியா அறியாமை யாம். (3)

திருமந் திரமே சிவவாழ்வின் வேதம்
பரவியதைச் சைவர் படித்து – வருவாரேல்
ஞானம் துளிர்க்குமுள நாலும் வெளிக்குமுயர்
கோனும் அருள்வான் குணம். (4)

சிவனே ஒருதெய்வம் செல்வத்துட் செல்வம்
அவனே அனைத்துலக வாதி – அவனே
அருவும் உருவும் அருவுருவு மானான்
குருவும் அவனே குறி. (5)

ஒன்றே குலமும் ஒருவனே தேவனென்றும்
நன்றே நலமுறவிந் நானிலத்தார் – அன்றே
தெரிவித்தார் ஆன்ற திருமூலர் காண்பார்
ஒருமித்து வாழ்வார் உயர்ந்து. (6)

சைவத்தில் போலியிலைச் சாதிபே தங்களிலைத்
தெய்வத்தின் முன்சீர் சிறப்பில்லை – வையத்தில்
வந்தவர்கள் யாவருமே மன்னுமுயர் சைவத்தின்
தந்தையருள் பெற்றவர்கள் தாம். (7)

நூலொன்று பற்றி நுனியுச்சி காண்நுட்பச்
சீலம் உரைத்த திருமூலர் – நூலதனைக்
கற்பார் பரமனருள் காட்டக் கதியடைந்து
துய்ப்பார் பிறவாச் சுகம். (8)

பூவாரம் சூட்டலிலும் பூசைபல செய்தலிலும்
பாவாரம் சூட்டல் பயனாகும் – ஓவாதே
நாவார நாயன்மார் நாளும் பரவிநின்ற
தேவாரம் கேட்பார் சிவன். (9)

ஆவா வெனவங்கும் இங்கும் அலைந்தெங்கும்
தாவும் மனத்துக்குச் சாந்திவர – தேவாரம்
ஓதல் மிகநன்றாம் ஓதச் சிவன்மீது
காதல் கனிந்திடுமாம் காண். (10)

பெற்ற பிறப்பின் பெரும்பயனை நன்குணர்வார்
பற்றிச் சிவனைப் பரவிநிதம் – உற்ற
வினைகள் அறுத்தவரின் மேலான இன்ப
மனையை அடைவார் மகிழ்ந்து. (11)

திருவா சகம்ஓதித் தேம்பத் தெரியார்
அரனார் திருவருளா னந்தம் – பருகும்
அருகதையும் அற்றார் அறியாதார் அண்டும்
குருவருளும் என்னே குணம். (12)

சமயங்கள் யாவுக்கும் தாய்ச்சமயம் சைவம்
இமயம்போல் தொன்மை எனலாம் – உமைபாகர்
தாமே அதைத்தொடங்கித் தாங்கி நடத்துகின்றார்
ஓமோம் அவராணை ஓம். (13)

சிவனொன்றே சீவன் திகழ்கோடி பாசம்
அவைமூன்றும் உண்மை அனாதி – அவற்றின்
விளக்கமே சைவநற் சித்தாந்தம் மேன்மை
அளக்கொணா ஆழம் அறி. (14)

சீர்மிகு சைவத்தின் மையம் சிவனல்ல
கோபுரங் கொண்டமா கோயிலல்ல – பேர்மிகு
மெய்வேதம் வேள்வி விழாவல்லச் சைவத்தின்
மையம் வலிய மனம். (15)

மனமுண் டெனச்சொன்னால் மாதேவன் உள்ளான்
மனமில்லை என்றால் மறைந்தான் – எனினும்
மனம்போன போக்கில் மதிவாணர் வாழார்
மனத்துக்கு மாட்டுவார் பூட்டு. (16)

மனத்தின் அமைச்சரது மாயங்கள் வைய
வனத்தில் மகிழ்ந்தாட வைக்கும் – நினைத்தே
அவற்றை அடக்கிநன் காளவல் லவர்க்கே
சிவத்தின் திறம்வெளிக்கும் தேர். (17)

ஐவர் அமளிகளுக்(கு) ஆட்படுவார் அன்பாலே
ஐயன் அருளுக்காள் ஆகாமல் – பொய்யைப்
பெருக்கிப் பிசக்கிப் பிறப்பின் பயனைச்
சுருக்கிப் பிறப்பார் தொடர்ந்து. (18)

சும்மா இருத்தல் சுகமென்பார் ஞானியர்கள்
சும்மா யிருக்கின்ற சூக்குமந்தான் – எம்மை
அலைகழிக்கும் ஐம்புலன்கள் தம்மை அடக்கி
நிலைக்கவைக்கும் செம்மை நெறி. (19)

பந்தபா சங்கள்தம் பற்றறுத்த பத்தர்களே
அந்தப் புரத்தை அடைவாராம் – சிந்திக்கின்
அம்மான் அருட்கடலில் ஆடி அடங்குதலே
சும்மா இருக்கும் சுகம். (20)

தத்துவம்முப் பத்தாறும் தாண்டின் இறைவனுடன்
அத்துவிதம் ஆகி அரிதாய – முத்தியினை
இப்பிறப்பிற் றானே இறையருளால் எய்திநின்ற
செப்பரிய சித்தர்திறம் தேர். (21)

காசிக்குச் சென்றென்ன கங்கையிலே மூழ்கியென்ன
பூசிக்கும் வேடம் புனைந்தென்ன – ஆசைக்கு
முற்றுந் தரிப்பதனை வைக்க முயலாதார்க்(கு)
உற்றான் உறவே துணர். (22)

காசுபணம் வீசிநன்கு காட்சிமிகு பூசைகளை
ஆசையுடன் செய்யும் அடியவர்க்குப் – பேசும்
புகழ்வருமோ பூசைசெய்த புண்ணியத்தால் வீடு
புகல்தகுமோ எல்லாம் புதிர். (23)

மாயப் பணம்வட்டி வாரும்பணம் மற்றுமுள்ள
தீயார் கொடைகளையும் சேர்த்திறைவன் – கோயில்
நிறுவ முயலாதீர் நின்மலனும் எழுந்தங்(கு)
உறைய விரும்பானாம் ஓம். (24)

களவுள்ளல் வஞ்சம் கரவுபொய் தஞ்சம்
கொளுமுள்ளம் செய்யும் கொலையும் – அளவில்லா
அன்பை வளர்க்கும் அடியார்க் கவையாகா
புன்கண் களைவீர் புரிந்து. (25)

ஒழுக்கம் உயர்வுதரும் என்றார் உணர்ந்தோர்
இழுக்காம் அதில்நின் றிழிதல் – பழுக்குமுன்பு
வெம்பி விழும்பழத்தை வேண்டா தொதுக்குமிந்த
அம்புவியின் பண்பும் அது. (26)

நில்லா துருளும் உலகத்தில் நில்லாவாம்
பொல்லாத புல்லர் புகழ்செல்வம் – கல்லார்
கருத்துரைகள் செல்லா கடவுள்புகழ் வைவார்
சரித்திரமும் நில்லா தறி. (27)

ஒழுக்கத்தை ஓதும் சமயங்கள் ஒண்சீர்
விழுப்பத்தைக் காணாத விண்ணர் – அழுக்கில்
விழுந்து மிகநொந்து வேதனைவெள் ளத்தில்
அழுந்திடினும் எய்தார் அறிவு. (28)

காலை மலர்ந்து கவின்காட்சி காட்டிவரும்
மாலை மடியும் மலர்போல – கோலம்
குலைவாக முன்னர் குவிந்துசிவன் தாளில்
நிலைபேறு காண்க நினைந்து. (29)

நிலையற்ற தெல்லாம் நிலையான கல்விக்
கலைகற்று வாழ்க்கைக் கடலை – அலைவின்றி
தாண்டத் தவஞ்செய்து தக்கோர் பெறுவாராம்
மீண்டும் பிறவாத வீடு. (30)

காற்றை நினைமின் கதிரைக் கனல்நீரைப்
போற்றி உணர்மின் புதியவைகள் – ஆற்றும்
புவியைப் புகழ்ந்தெழுமின் பூதங்கள் ஏத்தும்
சிவனைத் தொழுமின் தினம். (31)

நன்றி மறவாது நாளும் சிவனளிக்கும்
ஒன்றை நினைந்துணவை உண்பார்க்கு – மன்றாடும்
நற்றாள் அருளால் நலயாக்கை ஞானமுடன்
வற்றா வளமும் வரும். (32)

சொல்லும் பொருளும் சுவையும் தருபவனை
அல்லும் பகலும் அகத்திருத்தி – எல்லாம்
அவனே எனச்சொல்லி ஆராத அன்பால்
தவமே புரிக தனித்து. (33)

வேண்டும் சிவபூசை வீடுகளிற் செய்வதற்கு
வேண்டும் சுவாமியறை மேலுமங்கு – தூண்டும்
சுடரொளியால் சூழிருளை நீக்கிவரின் தொற்றிப்
படரிடர்கள் யாவும் படும். (34)

வீடதுவே வேதங்கள் மேன்மைப் பெருங்கோயில்
வீடதுவே பேரின்பம் வீடொன்றில் – கேடின்றி
ஆறி அமைதியுடன் வாழ அருள்கிடைத்தால்
வேறொன்றும் வேண்டாம் விடும். (35)

இவ்வுலக வீட்டை இடர்க்கடலில் விட்டுச்சிலர்
அவ்வுலக வீடடைய ஆசைப்படல் – கைவிளக்கைக்
கைவிட் டிருட்டில் கதிரவனை வாவென்று
கைகாட்டு வாரின் கதை. (36)

விரதங்கள் நன்றானால் வில்லங்கப் பட்டுப்
பரதங்கள் ஆடலன்று பத்தி – திருவைந்
தெழுத்தை மிகுமன்பால் செப்பிவரின் அஃதே
விழுப்ப விரதம் விழி. (37)

ஐந்தெழுத்தில் யாவும் அடங்கும் அதைநாளும்
மந்திரமாய்ச் சொல்வார் மகிழ்ச்சிக்கு – இந்திரனின்
ஒப்பில்லாச் செல்வம் உயர்வெல்லாம் பெற்றாரும்
ஒப்பாகார் உண்மை உணர். (38)

போற்றித் திருநீற்றைப் பூசார் புகழில்லார்
போற்றி உடல்பேணார் பூவாளார் - போற்றிநிதம்
வீழார் சிவனடியில் வெல்லார் இருள்மலத்தை
ஊழின் வழிப்பட்டார் ஓம். (39)

அதியார்வத் தாலே அறிவொளியை ஏற்றின்
பதிஞானம் முற்றிப் பழுக்கும் - அதனாலே
ஐவரையும் ஆண்டரனின் ஆனந்த வீடதனை
எய்துவரை சும்மா யிரும். (40)

## நூற்பயன்

கற்பார் சிவநெறியைக் கற்றுச் சிவனருளில்
நிற்பார் இருவினையும் நேராக - விற்பன்னத்
தற்பரனும் சற்குருவாய்த் தானே எழுந்தருளி
அற்புதங்கள் செய்தாள்வா னாம்.

சிவநெறிச் சிந்தனை முற்றும்.



## விளக்கக் குறிப்புகள்

**கடவுள் வணக்கம்:**

தூமணியே – தூய மணிபோன்ற திருமேனியை உடைய விநாயகப் பெருமானே!

**அவையடக்கம்:**

ஒண்பாக்கள் – விளக்கமான பாட்டுக்கள்.

**பாடல்:**

1. யாண்டும் – எப்பொழுதும்.
2. சீலம் – ஒழுக்கம்.
   சீலச் சிவன்கோயில் – சைவ ஒழுக்கம் பின்பற்றப்படும் கோயில்.
3. சீவனுக்குச் சீவன் அவன் – உயிருக்கு உயிரான சிவபெருமான்.
5. அருவும் உருவும் அருவுருவுமானான் – சிவபெருமான் அருவத் திருமேனி, உருவத் திருமேனி, அருவுருவத் திருமேனி அகிய மூன்று திருமேனிகளைக் கொள்ளத் தக்கவர்.
   அரு – உருவம் இன்மை. உரு – உருவம் உள்ளமை. அருவுருவம் – அருஎன்றும் உரு என்றும் சொல்லத் தகாத தன்மை.
6. திருமந்திரம் பாடல் 2104.
7. மன்னும் உயர் – நிலைபெற்று உயர்ந்த.
   தந்தை அருள் – சிவபெருமானது அருள்.
   அருள் – கருணை.

8. நூலொன்று பற்றி நுனியுச்சி காண்நுட்பம்:
நூல் – சுழுமுனை நாடி.
நுனியுச்சி – தலையுச்சி.
காண்நுட்பம் – சுழுமுனை நாடி ஆகிய நூல்வழியாகத் தலையுச்சியில் உள்ள பிரமந்தியை அடையும் கலை.
காண்க: திருமந்திரம் பாடல் 295.

9. ஓவாதே – இடைவிடாதே.
11. இன்ப மனை – பேரின்ப வீடு.
12. தேம்புதல் – விம்மி அழுதல்.
14. அவற்றின் – (பதி பசு பாசம் ஆகிய உண்மைப் பொருள்களின்) சிறப்பான இயல்புகள்.
அளக்கொணா – அளந்தறிய முடியாத.
17. மனத்தின் அமைச்சர்: அமைச்சர் – ஐம்புலன்கள்.
வையம் – உலகம்.

18. ஐவர்: ஐம்புலன்கள்.

19. சூக்குமம் – உட்பொருள், இரகசியம்.

20. அந்தப் புரம் – சிவபுரம்.

21. அத்துவிதமாகி – (இறைவனுடன்) ஒன்றாகி, இரண்டறக் கலந்து.
22. உறவே துணர் – உறவு ஏது உணர்.

24. நின்மலன் – அழுக்கு அற்றவன், இறைவன்.

25. புன்கண் – துன்பம், இழிவு.

26. அம்புவி – அழகான உலகம்.

27. வைவார் – ஏசுகின்றவர், தூற்றுகின்றவர்.

28. ஒண்சீர் விழுப்பம்: ஒண்மை – விளக்கம்.
சீர் – சீரான. விழுப்பம் – சிறப்பு, பெருமை.

29. கவின்காட்சி – அழகிய காட்சி.

34. படரிடர்: படர் இடர் – பரவுகின்ற துன்பம்.
37. விழுப்பம் – சிறப்பு.


39. பூவாளார் – பூ ஆளார்: இவ்வுலகத்தைஆளமாட்டார்.
இருள்மலம் – ஆணவம், மூலமலம்.

40. பதிஞானம் – இறைஞானம். இறைவன் தாளை அடையும் சிந்தனை.

**நூற்பயன்:**

இருவினை – நல்வினை தீவினை ஆகிய இரண்டும். நேராக – ஒப்பாக, இருவினையொப்பாக.
தற்பரன் – பரம்பொருள். சற்குரு – ஞானாசிரியன்.

உ
சிவ சிவ



**திருஞானசம்பந்தர்**
பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்
கோன் கழல் போற்றி

**திருநாவுக்கரசர்**
ஆழிமிசைக் கன் மிதப்பில் அணைந்த
பிரான் அடி போற்றி

**சுந்தரமூர்த்தி**
வாழி திருநாவலூர் வன்றொண்டர்
பதம் போற்றி

**மாணிக்கவாசகர்**
ஊழிமலி திருவாதவூரர்
திருத்தாள் போற்றி